DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| Name | விஜயக்குமார் |
|---|---|
| Father / Husband Name | சந்திரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.10.2018 அன்று மாலை 4.00 மணிக்கு நானும் என் அப்பாவும் என் தெருவில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் முல் வேளி போட்டிருந்தார்கள். செல்வதற்கு வழியில்லாமல் இருந்ததால் என் அப்பா முட்களை எடுக்க சென்றார். அப்போது ஆஜர் எதிரிகள் ரவி, கணபதி, சீனிவாசன், கோவிந்தன் ஆகியோர் எங்களை பார்த்து கோத்தா, கொம்மா தேவிடியா பையா என்று அசிங்கமாக பேசி சீனிவாசன் என்பவர் தடியால் என் அப்பாவின் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் கோவிந்தன், கணபதி ஆகியோர் கையால் என் அப்பாவை அடித்தார்கள். காயம்பட்ட எனது அப்பாவை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். இது குறித்து மதுராந்தகம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சந்திரன் |
| Father / Husband Name | கண்ணப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை, 2018 ம் வருடம் ஒரு நாள் மாலை 4.00 மணிக்கு நானும் என் பையனும் என் தெருவில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் தார் ரோட்டில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். செல்வதற்கு வழியில்லாமல் இருந்ததால் நானும் என் பையனும் முட்களை எடுக்க சென்றோம். அப்போது ஆஜர் எதிரிகள் ரவி, கணபதி, சீனிவாசன், கோவிந்தன் ஆகியோர் எங்களை பார்த்து ஏன் முல்லை எடுக்கிறாய் என்று கோத்தா, கொம்மா தேவிடியா பையா, பொறம்போக்கு பையா என்று அசிங்கமாக பேசி சீனிவாசன் என்பவர் தடியால் என்னை தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அதில் நான் மயக்கம் அடைந்து விழுந்துவிட்டேன். காயம்பட்ட என்னை எனது மகன் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் 12 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். இது குறித்து என் மகன் மதுராந்தகம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | எல்லப்பன் |
| Father / Husband Name | பொன்னுசாமி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.10.2018 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். செல்வதற்கு வழியில்லாமல் இருந்ததால் அதை எடுக்க சென்ற என் அண்ணன் சந்திரன் என்பவரை ஆஜர் எதிரிகள் ரவி, கணபதி, சீனிவாசன், கோவிந்தன் ஆகியோர் எங்களை பார்த்து ஏன் முல்லை எடுக்கிறாய் என்று கோத்தா, கொம்மா தேவிடியா பையா, பொறம்போக்கு பையா என்று அசிங்கமாக பேசி சீனிவாசன் என்பவர் தடியால் என் அண்ணன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரிகள் ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் என் அண்ணன் சந்திரனை கையால் அடித்தார்கள். காயம்பட்ட என் அண்ணனை அவரது மகன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். எதிரிகள் அசிங்கமாக பேசியதால் எங்களுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டது. என் அண்ணன் மருத்துவமனையில் 10 நாட்களுக்கு மேல் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father / Husband Name | சந்திரன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.10.2018 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது அதற்கு முந்தைய நாளே ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். யாராலும் அந்த வழியில் செல்லமுடியாமல் இருந்தது. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் சொன்னோம். போலிசார் 22.10.2018 ம் தேதி மாலையில் அந்த முட்களை வந்து எடுத்துவிட்டார்கள். அங்கே கீழே கிடந்த முட்களை எனது அப்பா சந்திரன் எடுத்தபோது ஆஜர் எதிரிகள் முட்களை எடுத்து இந்த வழியாக சென்றால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். எதிரி சீனிவாசன் ராடை எடுத்துவந்து எனது அப்பா சந்திரன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரி ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் என் அப்பாவை கையால் அடித்தார்கள். காயம்பட்ட எனது அப்பாவை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம், பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father / Husband Name | சின்னையன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.10.2018ம் தேதி மாலை 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது அதற்கு முந்தைய நாளே ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். யாராலும் அந்த வழியில் செல்லமுடியாமல் இருந்தது. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் சொன்னோம். போலிசார் முட்களை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார், நாங்கள் எடுத்துவிட்டோம். அங்கே கீழே கிடந்த முட்களை சந்திரன் எடுத்தபோது ஆஜர் எதிரிகள் சந்திரனை பார்த்து கோத்தா எங்களை மீறி ரோட்டில் போக முடியாது, மீறி போனால் கொன்று புதைத்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். எதிரி சீனிவாசன் கட்டை எடுத்துவந்து சந்திரன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரி ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் என் அப்பாவை கையால் அடித்தார்கள். காயம்பட்ட சந்திரனை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம், பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாண்டி |
| Father / Husband Name | கண்ணப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.10.2018 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நான் ஊரில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். நாங்கள் அந்த முட்களை எடுக்க சென்றோம். ஆஜர் எதிரிகள் எடுக்கக்கூடாது என்று முல்லை எடுத்தால் வெட்டிவிடுவோம், கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் சொன்னோம். போலிசார் முட்களை எடுத்துபோட்டார்கள். அங்கே கீழே கிடந்த முட்களை சந்திரன் எடுத்தபோது ஆஜர் எதிரிகள் சந்திரனை பார்த்து கோத்தா, தேவிடியா பையா என்று அசிங்கமாக பேசி எதிரி சீனிவாசன் கட்டை எடுத்துவந்து சந்திரன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரி ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் என் அப்பாவை கையால் அடித்தார்கள். காயம்பட்ட சந்திரனை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம், பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 7

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father / Husband Name | பொன்னுரங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.10.2018 ம் தேதி மாலை 4.00 மணிக்கு நான் ஊரில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் சொன்னோம். போலிசார் முட்களை எடுத்துபோட்டார்கள். அங்கே கீழே கிடந்த முட்களை சந்திரன் எடுத்தபோது ஆஜர் எதிரிகள் சந்திரனை பார்த்து கோத்தா, தேவிடியா பையா உன்னை அடித்து சாகடித்துவிடுவேன் என்று அசிங்கமாக பேசி எதிரி சீனிவாசன் கட்டை எடுத்துவந்து சந்திரன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரி ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் என் பெரியப்பாவை கையால் அடித்தார்கள். காயம்பட்ட பெரியப்பா சந்திரனை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம், பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜேஷ்வரி |
| Father / Husband Name | பொன்னுரங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து கழனி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணிக்கு நான் ஊரில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். அந்த முட்களை சந்திரன் எடுத்தபோது ஆஜர் எதிரிகள் சந்திரனை பார்த்து எல்லாரும் வாங்கடா தேவிடியா பசங்களா என்று அசிங்கமாக பேசி எதிரி சீனிவாசன் கட்டை எடுத்துவந்து சந்திரன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரி ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் சந்திரனை கையால் அடித்தார்கள். காயம்பட்ட சந்திரனை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம், பின்னர் மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 9

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | வீரராகவன் |
| Father / Husband Name | பீமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 4.00 மணிக்கு நான் ஊரில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் பொதுப்பாதையில் வேளிகாத்தான் முல்லை போட்டிருந்தார்கள். அந்த முட்களை சந்திரன் எடுத்தபோது ஆஜர் எதிரிகள் சந்திரனை பார்த்து கோத்தா, கொம்மா என்று அசிங்கமாக பேசி எதிரி சீனிவாசன் கட்டை எடுத்துவந்து சந்திரன் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பின்னர் ஆஜர் எதிரி ரவி, கணபதி, கோவிந்தன் ஆகியோர் சந்திரனை கையால் அடித்தார்கள். காயம்பட்ட சந்திரனை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 10

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரபு |
| Father / Husband Name | கோவிந்தன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி சங்கர் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா10 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 22.10.2018 ம் தேதி மாலை 6.30. மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது சந்திரனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக போலிசார் சம்பவ இடம் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் சங்கர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 71/2025

Sessions : PW 11

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சங்கர் |
| Father / Husband Name | கோவிந்தன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 28.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டரைப்புதுச்சேரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி சங்கர் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா11 ன் இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 22.10.2018 ம் தேதி மாலை 7.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது சந்திரனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக போலிசார் சம்பவ இடம் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் என் தம்பி பிரபு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. (எதிரிகள் ஆஜர் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).